**No of Printed Pages: 4** **Roll No**

# SMART TEACHERS ASSOCIATION & WAY TO SUCCESS GROUPS
# SSLC MODEL PUBLIC EXAMINATION – 2023-24
## மொழிப்பாடம் I - தமிழ்

**கால அளவு : 15 நிமிடம் + 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரை** : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு** : (1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
(2) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**
**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

2. ‘உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன்’ என்றும்
‘பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன்’ என்றும் பாராட்டப்படுவோர் ________.
அ) உதியன்; சேரலாதன் ஆ) பேகன்; கிள்ளிவளவன்
இ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி ஈ) அதியன்; பெருஞ்சாத்தன்

3. ‘உனக்குக் கதை எழுதத் தெரியுமா?’ என்ற வினாவிற்குக் ‘கட்டுரை எழுதத் தெரியும்’ என்று கூறுவது ____ ஆகும்.
அ) சுட்டு விடை ஆ) இனமொழி விடை இ) நேர் விடை ஈ) ஏவல் விடை

4. ‘மெத்த வணிகலன்’ என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது _______.
அ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும் ஆ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
இ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ___.
அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

6. ‘மிரியல்’ என்பதன் பொருள் _______.
அ) மிளகு ஆ) சணல் இ) தொழில் ஈ) உசிலமரம்

7. பொருத்துக.
அ) பொய்க்கால் குதிரையாட்டம் - 1. கரகாட்டம்
ஆ) தப்பாட்டம் - 2. உறுமி
இ) கும்பாட்டம் - 3. புரவியாட்டம்
ஈ) தேவராட்டம் - 4. தோற்கருவி
அ) 4, 2, 1, 3 ஆ) 3, 4, 1, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 2, 4, 1, 3

8. செய்தி :1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி :2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி : 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

9. “பிரிந்தன புள்ளின் **கானில்**
பெரிதழுது இரங்கித் **தேம்ப**” பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.
அ) கிளை, துளை ஆ) நிலம், வாட இ) காடு, வாட ஈ) காடு, நிலம்

10. ‘ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் நாளை இந்தியா வருகிறார்!’ என்பது ________.
அ) பால் வழுவமைதி ஆ) இட வழுவமைதி
இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

11. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்________.

அ) நாட்டைக் கைப்பற்றுதல் ஆ) வலிமையை நிலைநாட்டல்

இ) ஆநிரை கவர்தல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*“நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு”*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் ________.

அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) பரிபாடல் ஈ) மெய்க்கீர்த்தி

13. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள் ________.

அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம் இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14. தடக்கை - இலக்கணக் குறிப்பு ________.

அ) உம்மைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) வினையாலணையும் பெயர்

15. இப்பாடலின் ஆசிரியர் _______.

அ) ஔவையார் ஆ) நப்பூதனார் இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. ‘இறடிப் பொம்மல் பெறுகுவிர்’ - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

17. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது.

ஆ) மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும்.

18. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.

19. காலக்கணிதம் கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த இரண்டு கருத்துகளை எழுதுக.

20. ஜெயகாந்தனின், திரைப்படமான படைப்புகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.

21. “பண்என்னாம்” எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக.

23. ‘பொழிந்த’ - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. கொடுக்கப்பட்ட இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

(அ) சிலை - சீலை (ஆ) விடு - வீடு

25. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

26. கலைச்சொல் தருக.

(அ) Land Breeze (ஆ) Intellectual

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

(அ) மனக்கோட்டை (ஆ) கண்ணும் கருத்தும்

27. நாள் காட்டியில் திங்கட்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் எந்த நாட்களில் வரும் என்பதைத் தமிழெண்களில் எழுதுக.

28. **கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான நிறுத்தற்குறி இடுக.**

மலை என்னை அடிக்கடி அழைக்கும் மலைமீது ஏறுவேன் ஓரிடத்தில் அமர்வேன் மேலும் கீழும் பார்ப்பேன் சுற்றுமுற்றும் பார்ப்பேன் மனம் அமைதி எய்தும்

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

29. காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு (Computer Program) எனலாம். அது தானாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. இந்த அறிவைக்கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல, தானே முடிவெடுக்கும் திறனுடையது. ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார். அவ்வாறு கற்றுக்கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில், தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும். செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை; செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்பதே அதன் சிறப்பு.

(அ) செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?
(ஆ) எந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை?
(இ) செயற்கை நுண்ணறிவின் சிறப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

31. 'பொய்க்கால் குதிரையாட்டம்' என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

33. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) 'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடலை எழுதுக.

**(அல்லது)**

(ஆ) 'தண்டலை' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

### பிரிவு – 3

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

35. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாடவேண்டுமா?" என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

**- இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.**

36. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

37. "குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு" - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25**

38. (அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

(ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. (அ) மாநில அளவில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் நாட்டுப்புறம் சார்ந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை / தோழியை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

(ஆ) நாளிதழ் ஒன்றில் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தைக் கவினுற எழுதுக.



41. திருச்சி மாவட்டம், சங்கிலியாண்டபுரம், பாரதி தெருவில் 14-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் பொன்வண்ணனின் மகன் இளமாறன் திருச்சி அரசுப்பள்ளியில் பத்தாம் வகுப்பு முடித்துள்ளார். தமிழ் வழியில் பயின்ற இவர் அரசுப் பொதுத்தேர்வில் 473 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். மேலும் அதே பள்ளியில் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர்கள் இளமாறனுக்கான மேல்நிலை வகுப்பு விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும்.

42. (அ) மனித வாழ்க்கையில் எத்தனையோ அறங்கள் உள்ளபோது, மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) மொழிபெயர்க்க.

**Koothu**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

(i) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
(ii) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
(iii) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
(iv) இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
(v) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. (அ) தமிழ்மொழி சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெளிவாக விளங்குவதற்கான காரணங்கள் சிலவற்றைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

(ஆ) எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

44. (அ) பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல், ‘அன்னமய்யா’ புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை ‘கோபல்லபுரத்து மக்கள்’ கதைவழி விளக்கி எழுதுக.

**(அல்லது)**

(ஆ) இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும்.

45. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

(அ) **குறிப்புகள்**: முன்னுரை – தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – பிறதுறைக் கருத்துகள் – முடிவுரை.

**(அல்லது)**

(ஆ) **குறிப்புகள்**: முன்னுரை – சுற்றுசூழல் அறிமுகம் – சூழல் மாசடைதல் – பாதிப்புகள் – புவி வெப்பமயமாதல் – பாதுகாப்பு நடவடிக்கைகள் – சுற்றுச் சூழல் பாதுகாப்பில் நம் கடமைகள் – முடிவுரை.